<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 117/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சுப்ரமணி | நாள் | 26.04.2023 |
| தகப்பனார் பெயர் | மாணிக்கம் | | |

**<u>1 முதல் 3, 5ம் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:-</u>**

1) இவ்வழக்கில் நான் எத்தனையாவது வாதி என்றால், மொத்தம் 4 பேர் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அதில் நான் எத்தனையாவது நபர் என எனக்கு ஞாபகமில்லை.

2) இவ்வழக்கில் நான் எனக்காகவும், மற்ற வாதிகளுக்கும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், தடவழி கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

3) 1ம் வாதி சீதாராமனுக்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரனத்தில் சொத்து உள்ளது என்றால், தற்போது எனக்கு சரியாக ஞாபகமில்லை. 1ம் வாதி சீதாராமனுக்கு மேற்படி சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால், பொன்னப்பன் என்பவரிடமிருந்து சீதாராமன் கிரயம் பெற்ற வகையில் பாத்தியப்பட்டது.

4) மேற்படி சீதாராமன் பெயரிலுள்ள கிரயப் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். ஆனால் அதிலுள்ள சங்கதிகளை நான் படித்ததில்லை. மேற்படி ஆவணத்திலுள்ள சங்கதிகளை குறித்து நான் படித்துப் பார்க்காமல் தான் இந்நீதிமன்றத்தில் நான் என் தரப்பில் சான்றாவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

5) மேற்படி சீதாராமனின் பெயரிலுள்ள கிரயபத்திரத்தில் தடவழி குறித்து ஏதேனும் சரத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கில் 2ம் வாதியான சண்முகம் என் சித்தப்பா. மேற்படி சண்முகத்திற்கு சொத்து எவ்வாறு வந்தது என்றால், குடும்ப பாகபிரிவினையின் படி பாத்தியப்பட்டது.

6) மேற்படி சண்முகத்தின் பெயரிலுள்ள பாகபிரிவினை பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். என் தந்தைக்கும், என் சித்தப்பா சண்முகத்திற்கும் சமமாக பாகம் பிரித்துக்கொடுக்கப்பட்டது.

7) மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் படி எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் என் தந்தைக்கும், என் சித்தப்பாவிற்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், சர்வே எண் எனக்கு சரியாக தெரியவில்லை. ஆனால் என் சித்தப்பாவிற்கு 1 ஏக்கர் 90 செண்டும், என் தந்தை மாணிக்கத்திற்கு 1 ஏக்கர் 90 செண்டும் பாகமாக ஒதுக்கப்பட்டது.

8) மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் என் தந்தைக்கும், என் சித்தப்பாவிற்கும் அவரவர் பாகங்களுக்கு செல்ல தடவழி கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

(1 முதல் 3, 5ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.